மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அந்த இயக்கம் தமிழகக் காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து மத்திய அரசோடு தொடர்புகொள்ளும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கம் நம்முடைய நாட்டிலே ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு கொண்டுள்ளது என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான பயிற்சி பெறும் நோக்கில் மத வெறி அல்லது வகுப்புவாதம் போன்றவைகளிலே இது ஈடுபடுகிறதா என்பதைக் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள் 'கல்சுரல்' பண்பாட்டுத் தன்மைகள் வாய்ந்தவை என்றும் அரசியல் தன்மைகள் வாய்ந்தவை அல்ல என்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

Kannagi Temple

*271 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Kannagi temple, mentioned in Silapathikaram written by Ilango Adigal is in ruins in a place between the Kerala and Tamil Nadu border; and

(*b*) if so, whether this Government have requested the Kerala Government to locate the place?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ் நாட்டின் எல்லைக்கருகில் கேரள மாநிலத்தில் சுருளிமலைத் தொடரில் காணப்படும் பாழடைந்த கோயில் சரித்திரப் புகழ் பெற்ற கண்ணகியின் கோயிலாக இருக்கலாமென நம்ப இடமுள்ளது என்று கூறப்படுகிறது.

(இ) இக் கோயிலைப் புதுப்பித்துச் சிறப்பிக்க இதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்கக் கோரி கேரள மாநில அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டது. கேரள அரசின் இறுதியான பதில் கிட்டவில்லை.

1972 ஆகஸ்ட் 23]

திரு. என். கே. பழனிசாமி : சார், கண்ணகிக்குக் கோயில் மலபாரிலே கட்டியிருந்தால் கண்ணகி ஒரு மலையாளப் பெண் என்று சரித்திரத்தினுடைய மாற்றம் ஏற்படும். ஆகையால் இதைப் பற்றி விரிவாக ஆலோசனைசெய்து சரித்திரத்தை நல்ல முறையிலே ரிரைட் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கரந்தையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் கோவிந்தராஜன் என்பவர் கேரள மாநிலத்தின் எல்லையில் தாம் கண்டுபிடித்ததாகச் சொல்கிற அளவுக்கு அங்கே ஒரு கண்ணகி கோயில் இருப்பதாகச் சொல்கிருர்கள். அந்த முறையிலேயே பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதி வருகிருர்கள். அண்மையில் நடத்திய ஆராய்ச்சியின் மூலமாக பெரியாறு மேல் முகட்டிலிருந்து தென் கிழக்கில் சுமார் 7 மைல்கள் தூரத்தில் உள்ள கோயில் ஒன்று கண்ணகிக்காகச் சமைக்கப்பட்ட நினைவுக் கோயில் எனக் கருதப்படுகிறது. இந்த இடம் வேங்கைக் கானல் என்று கூறப்பட்ட பழங்காலக் கிராமத்தில் மங்களாதேவிக் கோட்டம் எனவும் கேரள மாநிலத்தில் சுருளிமலையின் மேற்குத் தொடரில் தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது எனவும் தெரிய வருகிறது. பாழடைந்த நிலைமையிலுள்ள இந்நினைவுக் கோயிலில் 400 அடி நீளமும் 3 அடி அகலமும் 10 அடி உயரமும்கொண்ட ஒரு மண்டபம் இருக்கிறது. இக்கோயிலில் வட்ட எழுத்து என்று சொல்லப்படும் கல்வெட்டுக்களில் சங்க காலத் தலைவி கண்ணகியைப்பற்றிய விலைமதிக்க முடியாத செய்திகள் உள என்று நம்பப்படுகிறது. இதுபற்றியெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரும், வரலாற்று அறிஞர்களும் ஆராய வேண்டியவர்களாக இருக்கிருர்கள். இதற்காக நாம் கேரள அரசினருடைய அனுமதியைக் கேட்டிருக்கிருேம். கேரள அரசோடு தொடர்புகொண்டு இதைப்பற்றி மேலும் ஆராய்வதற்கும் அது கண்ணகி கோயிலாக இருக்கும் என்று நிச்சயிக்கப் படுகிற சூழ்நிலையில் அதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிருேம்.